# Orientation to Ontario

# சுற்றுச்சூழலைப் பராமரித்தல்

1-855-626-0002
orientationontario.ca/en

குப்பைகளைக் கொட்ட வேண்டாம்! – ஒன்ராறியோவின் நிலத்தையும் நீரையும் சுத்தமாக வைத்திருப்பதற்கு எல்லா ஒன்ராறியர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். குப்பைகளைக் கொட்டுவது என்பது நகரத்திலோ நாட்டிற்கு வெளியேயோ எந்த வகையான குப்பைகளையும் தரையில் விடுவது ஆகும். குளங்களிலும் ஆறுகளிலும் குப்பைகளை எறிவதும் குப்பைகளைக் கொட்டுதல் எனப்படும்.

## கழிவு முகாமை

### வீட்டுக் கழிவு

வெவ்வேறு மாநகராட்சிகள் வீட்டுக் கழிவுகளை வெவ்வேறு வழிகளில் முகாமை செய்கின்றன. சில உள்நாட்டு அரசாங்கங்கள் குப்பை சேகரிப்புக்குக் கட்டணங்களை வசூலிக்கின்றன, அத்துடன் குப்பைகளுக்காக, மீள்சுழற்சிக்காக, சேதன கழிவுகளுக்காக என்று விசேடமான குப்பைத் தொட்டிகளை வழங்குகின்றன. குப்பை என்பது மீள்சுழற்சி செய்யவோ உரமாக்கவோ முடியாத கழிவு ஆகும்.

அநேகமான சமூகங்கள் கடதாசி, கண்ணாடி, பிளாஸ்டிக், அலுமினியம், ஏனைய பொருட்களை மீள்சுழற்சி செய்வதற்காக Blue Box (நீலப் பெட்டி) திட்டங்களைக் கொண்டுள்ளன. மீள்சுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் புதிய தயாரிப்புகளை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.

Green Bin (பசுமைத் தொட்டி) நிகழ்ச்சித்திட்டங்கள் பழங்கள், மரக்கறித் துண்டுகள், இறைச்சி, கோப்பித் தூள்கள் போன்ற சேதனக் கழிவுகளை வழக்கமான குப்பைகளிலிருந்து வேறாகச் சேகரிக்கின்றன.

சேதனக் கழிவு உரமாக மாற்றப்பட்டு, பூங்காக்களிலும் விவசாய நிலங்களிலும் மண்ணை வளப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு Blue Box (நீலப் பெட்டி) ஐப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது உங்களுடைய பகுதியில் ஒரு Green Bin (பசுமைத் தொட்டி) நிகழ்ச்சித்திட்டம் உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கு, உங்களுடைய உள்ளூர் மாநகராட்சி மன்றத்தைத் தொடர்புகொள்க.

Ministry of Municipal Affairs and Housing (மாநகராட்சி விவகாரங்கள், வீட்டுவசதி அமைச்சு) ஐ mah.gov.on.ca இல் அல்லது findlink.at/muniseroff இல் பார்வையிடுக

ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட அலகுகளைக் கொண்ட குடியிருப்புக் கட்டிடங்களில் மீள்சுழற்சி செய்வது கட்டாயமானது என்று Environmental Protection Act (சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம்) கூறுகிறது. நீர் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கிறீர் என்றால், எவ்வாறு மீள்சுழற்சி செய்வது என்று உங்களுடைய கண்காணிப்பாளரிடம் கேளுங்கள். சில சமூகங்கள் அடுக்குமாடி குடியிருப்பாளர்களுக்கான உரமாக்கல் திட்டங்களையும் கொண்டிருக்கலாம்.

Funded by/Financé par :

Immigration, Refugees and Citizenship Canada | Immigration, Réfugiés et Citoyenneté Canada

Ontario



### இலத்திரனியல் ப◌ொருட்கள்

இ-கழிவில் எவருக்கும் விருப்பமற்ற அல்லது தேவையற்ற கமராக்கள், கணனிகள், கணனியின் திரையகங்கள், த◌ொலைபேசிகள் ப◌ோன்ற ப◌ொருட்கள் அடங்குகின்றன. இப்ப◌ொருட்கள் ஒரு விசேடமான கிடங்கில் மீள்சுழற்சி செய்யப்படல் வேண்டும். நீங்கள் ஒன்ராறிய◌ோவில் இலத்திரனியல் ப◌ொருட்களைக் க◌ொள்வனவு செய்யும் ப◌ோது, ஒரு சுற்றுச்சூழல் கையாளுகைக் கட்டணத்தை (EHF) செலுத்துகிறீர். இப்பணம் இலத்திரனியல் தயாரிப்புக்களை மீள்சுழற்சி செய்யும் அல்லது புதுப்பிக்கும் செலவுக்காகக் கட்டணம் செலுத்தப் பயன்படுத்தப்படுகிறது.

உங்களுடைய பகுதியில் உள்ள ஒரு இலத்திரனியல் மீள்சுழற்சிக் தளத்தைக் கண்டறிய recyclemyelectronics.ca ஐப் பார்வையிடுக.

## வலுசக்தி, நீங்கள் பேணல்

மின்சாரத்தை உற்பத்தி செய்வது சுற்றுச்சூழலுக்கு எதிர்மறையான பின்விளைவுகளை ஏற்படுத்துகிறது. வலுசக்தியைப் பேணுவது உங்களுடைய பணத்தையும் மீதப்படுத்துகிறது.

வலுசக்தி பேணல் பற்றி மேலும் அறிந்து க◌ொள்வதற்கு, Ministry of Energy (வலுச்சக்தி அமைச்சு) ஐ energy.gov.on.ca இல் அல்லது findlink.at/savinenerg இல் பார்வையிடுக.

பாதுகாப்பான, சுத்தமான குடிநீரை வீணாக்கக் கூடாது. தண்ணீர் பேணல் பற்றிய மேலதிக தகவலுக்கு உங்களுடைய உள்ளூர் மாநகராட்சியைத் த◌ொடர்பு க◌ொள்க.

Ministry of Municipal Affairs and Housing (மாநகராட்சி விவகாரங்கள், வீட்டுவசதி அமைச்சு) ஐ mah.gov.on.ca இல் அல்லது findlink.at/muniseroff இல் பார்வையிடுக

**முக்கிய குறிப்பு**

- **குப்பை க◌ொட்ட வேண்டாம்**
- **குறைக்குக, மீளப்பயன்படுத்துக, மீள்சுழற்சி செய்க**
- **உரமாக்குக அல்லது Green Bin (பச்சைத் த◌ொட்டி) ஐப் பயன்படுத்துக**

**உங்களுக்குத் தெரியுமா?**

**ஒன்ராறிய◌ோவில் குப்பை க◌ொட்டினால் உமக்கு $1,000 வரை அபராதம் விதிக்கப்படலாம். நீங்கள் நெடுஞ்சாலையில் குப்பை க◌ொட்டினால், ப◌ொலிசார் உங்களுடைய காரை நிறுத்தி ஒரு டிக்கெட்டை வழங்கலாம்.**

